

# உங்கள் கனவுகளுக்கு வடிவம் கொடுத்து வண்ணமயமாக்குங்கள்!

## நட்புறவு மற்றும் கலையின் மூலம் கனவுகளை உருவாக்கலாம்

**உத்தேச நேரம்:**
15 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம்


Befriender's Arts Toolkit

**தேசிய கலை மன்றம் பற்றிய விவரம்**

தேசிய கலை மன்றம் சிங்கப்பூரில் கலை வளர்ச்சிக்குத் துணை நிற்கிறது. உன்னதப் படைப்பாற்றலைப் பேணி வளர்த்து, பரந்துபட்ட மக்களின் கலை ஈடுபாட்டுக்கு ஆதரவளிப்பதன் மூலம், நமது பன்மயமான, தனித்துவமிக்கக் கலைகள் நம் மக்களுக்கு ஊக்கமளித்து, சமூகங்களை இணைத்து, சிங்கப்பூரை அனைத்துலக அரங்கில் இடம்பெறச் செய்திருக்கின்றன. சீரிய கலைஞர்களையும் துடிப்பான நிறுவனங்களையும் எதிர்காலத்திற்காக வளர்த்து, நமது வளமான கலாசாரப் பாரம்பரியங்களை நாங்கள் பாதுகாக்கிறோம். மானியங்கள், பங்காளித்துவங்கள் முதல் தொழில்துறைக்கு உறுதுணை, கலைகளுக்கு அமைவிடங்கள் ஆகியன வரை கலைகளுக்கு நாங்கள் விரிவான ஆதரவு வழங்குகிறோம். தனியாரும் நிறுவனங்களும் கலைகளுக்கும் கலைகளின் மூலமும் கொடை வழங்குவதை மன்றம் வரவேற்கிறது. இதன்வழி, அனைவரது வாழ்க்கையிலும் கலைகளை நம்மால் முக்கிய அங்கமாக்க இயலும். மன்றத்தின் பணிகள் மற்றும் திட்டங்கள் பற்றி மேல்விவரம் அறிய, அன்புகூர்ந்து www.nac.gov.sg எனும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**எங்களை இணையத்தில் கண்டறிந்திடுங்கள்**
www.nac.gov.sg/BAToolkit

**எங்களை ஹாஷ்டாக் செய்திடுங்கள்**
நீங்கள் படங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது, சக நட்பாளர்களுடன் இணையும்போது, அல்லது எங்கள் நடவடிக்கைகள் சார்ந்த எதையேனும் செய்யும்போது #BAToolkit பயன்படுத்துங்கள்!



**அன்பார்ந்த நட்பாளரே,**
**கலை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பலதரப்பட்ட பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றுகூடவும், கதைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவும், சமூகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. நட்பாளரின் இந்தக் கலைத் தொகுப்பு, உங்களைப் போன்ற நட்புறவுத் திட்டத் தொண்டூழியர்கள் வீடுகளுக்கு வருகையளிக்கும்போது சுலபமான கலை உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எளிய யோசனைகளை வழங்குகிறது. உங்களுக்குக் கலை பின்னணி இருந்தாலும் இல்லாவிட்டாலும், எளிதாகவும் கேளிக்கையாகவும் இருக்கும் வகையில் கலைத் தொகுப்பை வடிவமைத்திருக்கிறோம் - இதன்வழி பயனாளர்களை ஈடுபடுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்த இயலும்!**

**கலை, கனவுகள், படைப்பாற்றல் மூலமாகப் பயனாளர்களுடன் நீங்கள் தொடர்பை ஏற்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும். உங்கள் கற்பனையைச் சிறகடித்துப் பறக்கவிட்டு, உங்களது சுற்றுப்புறத்தைச் சாதகமாக்கிக்கொண்டு, உங்களது பயனாளர் கலையை உருவாக்க வழிகாட்டுங்கள். உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள வடிவங்களையும் வண்ணங்களையும் பயனாளருடன் கண்டறிந்து, அவருடன் இணைந்திடுங்கள். பிறகு, ஒரு கனவின் துணுக்குகளைப் போல அவற்றை எவ்வாறு ஒன்றுசேர்ப்பது என புதிதாகக் கற்பனை செய்து பாருங்கள். இவ்வாறு செய்கையில், ஓவியம் கடைசியில் எப்படி இருக்கப்போகிறது என்பதைவிட பயனாளரை ஈடுபடுத்துவதும் கேளிக்கையாகப் பொழுதைக் கழிப்பதுமே முக்கியம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்!**

## முக்கியமான பொருட்கள்

**உங்களுக்குத் தேவையானவை:**

1. கேமரா (எ.கா. கைபேசி கேமரா)



2. ட்ராயிங் பிளாக் தாள்
3. மெழுகு வண்ணங்கள்



**மேலும் இனிமையாக்கிடுங்கள்!**

மெழுகு வண்ணங்கள் இல்லையா? உங்களிடம் ஏற்கனவே இருப்பவற்றைப் பயன்படுத்துங்கள் – எ.கா. வண்ணப் பென்சில்கள், நீர்வண்ணங்கள், சாயம், மார்க்கர் பேனாக்கள் போன்றவை.

**படிப்படியான வழிகாட்டிகளும் குறிப்புகளும் கொண்ட காணொளியைக் காண, பார்க்கவும்:**
https://artsforall.sg/resources/toolkit/befrienders-arts-toolkit.aspx

## செயல் 1

### உங்களைச் சுற்றிலுமுள்ள பொருட்களைப் படமெடுங்கள்

ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள முயற்சி எடுங்கள். உங்களைச் சுற்றிலுமுள்ள இடத்தைப் பார்வையிட்டு, உங்கள் இருவருக்கும் பிடித்த பொருட்களை அல்லது காட்சிகளைப் படமெடுங்கள். உங்கள் பயனாளரிடம் அவ்விடத்தைச் சுற்றிக்காட்டச் சொல்லி, சுற்றிப்பார்க்கும் போது அவருடன் உரையாடுங்கள்.

ஆர்வத்தைத் தூண்டும் அம்சங்களையும் வடிவங்களையும் தேடுங்கள். எடுத்துக்காட்டாக, சன்னல் கம்பிகள், புகைப்படச் சட்டங்கள், சமையலறை அடுப்புகள், பஞ்சணைகள், அல்லது குளிர்பான டின். உண்மையிலேயே எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்! அல்லது உங்கள் பயனாளர்களுக்கு வீட்டிலேயே பிடித்தமான இடத்தை, அல்லது ஆக விருப்பமான வடிவத்தை அல்லது நிறத்தைக் காட்டச் சொல்லுங்கள்.





### உரையாடல் குறிப்பு!

சுயவிடை கேள்விகள் கேட்டு, உரையாடலைத் தொடருங்கள். உங்கள் பயனாளர் தனது எதிர்பார்ப்புகளை, நினைவலைகளை அல்லது வாழ்க்கை கதைகளைப் பகிர்ந்துகொள்ள ஊக்கமளித்திடுங்கள்:

உங்களுக்குப் பிடித்த நிறம் என்ன? ஏன்?

உங்களை மகிழ்விப்பது எது?

நீங்கள் எதைப்பற்றி கனவு காண்பீர்கள்?

இது (பொருளைச் சுட்டிக்காட்டி) உங்களுக்கு எதை நினைவுபடுத்துகிறது?

## செயல் 2

### உங்களைச் சுற்றிலுமுள்ள வடிவங்களையும் நிறங்களையும் அடையாளம் காணுங்கள்

நீங்களும் உங்கள் பயனாளரும் சேர்ந்து எடுத்த புகைபடங்களிலுள்ள வடிவங்களையும் நிறங்களையும் அடையாளம் காணுங்கள்.





செயல் 3

## நீங்கள் வரையும் ஓவியத்திற்கு உங்களைச் சுற்றிலுமுள்ள வடிவங்களை வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்

ட்ராயிங் பிளாக் தாளையும் மெழுகு வண்ணங்களையும் எடுத்துவைத்து, வரையத் தொடங்குங்கள். உங்கள் பயனாளர் ஒரு நிறத்தைத் தேர்ந்தெடுக்க அல்லது வடிவத்தை வரைய வழிகாட்டுங்கள் - நீங்கள் தெரிவுகள் தரலாம், அல்லது நீங்கள் முதலில் தொடங்கி, அவரை உங்களுக்கு உதவச்சொல்லி ஊக்குவிக்கலாம்.

கற்பனை வளத்தைப் பயன்படுத்தி, ஓர் அடிப்படை வடிவத்திலிருந்து எதை வேண்டுமானாலும் ஒருவரால் வரைய முடியும். எனவே, உங்கள் கற்பனையைச் சிறகடித்து பறக்கவிட்டு, வடிவங்களுடன் என்னென்ன கலையம்சங்களைச் சேர்க்க முடிகிறது என்பதைப் பாருங்கள்!

குறிப்பு!

### கற்பனையைச்சிறகடித்துபறக்கவிடுங்கள்!


வடிவங்களைப்பயன்படுத்திபுதியவடிவங்களைஉருவாக்குங்கள். எடுத்துக்காட்டாக,இரண்டுசதுரங்களைக்கொண்டுஒருநீள்சதுரம் உருவாக்கலாம்,இரண்டுமுக்கோணங்களைக்கொண்டுஒரு நட்சத்திரம்அல்லதுவைரம்உருவாக்கலாம்–கனவுகளைப் போலவே,எல்லையில்லாசாத்தியங்கள்உள்ளன.


### வண்ணங்களைப் பளிச்சிடச் செய்திடுங்கள்!


ஓவியம் பளிச்சிடும் வகையில் மாறுபாடான வண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள். சிவப்புடன் பச்சை, மஞ்சளுடன் ஊதா, நீலத்துடன் ஆரஞ்சு போன்ற வண்ணங்கள் அற்புதமாகப் பளிச்சிடும்.

### விளையாட்டுகள் விளையாடுங்கள்!

சூழ்நிலையைக் கேளிக்கையாகவும் உற்சாகமாகவும் வைத்திருங்கள். உங்களுக்குப் பிடித்த நிறத்தை ஊகித்துச் சொல்லுமாறு, தமது மிகவும் நகைச்சுவையான கனவைப் பகிர்ந்துகொள்ளுமாறு, அல்லது எதையாவது வரைந்து காட்டி அது என்னவென்று கண்டுபிடிக்குமாறு பயனாளரிடம் சொல்லுங்கள்.







செயல் 4

## ஓவியம் பூர்த்தியடைந்தது!

நடவடிக்கையை நீங்கள் நிறைவுக்குக் கொண்டுவரும்போது, உங்கள் பயனாளரின் கலைப்படைப்பு அவரது கனவுகளில் எதைப் பிரதிபலிக்கிறது எனக் கேளுங்கள். சுயவிடைக் கேள்விகளையும் “மேலும் சொல்லுங்கள்” போன்ற சொற்றொடர்களையும் பயன்படுத்துங்கள். மேலும் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டுங்கள்!

தமது படைப்பாற்றல் பயணத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டதற்குப் பயனாளருக்கு நன்றி கூறுங்கள். பிரபல ஓவியர்கள் செய்வதுபோல, அவரைத் தமது கலைப்படைப்புக்குத் தலைப்பிட்டு, கையொப்பமிடச் சொல்லுங்கள்! ஓவியத்தை மாட்டிவைக்க ஓர் இடத்தைத் தேர்ந்தெடுங்கள், அல்லது நீங்கள் இருவரும் பகிர்ந்துகொண்ட தருணத்தை நினைவுகூர சேர்ந்து படமெடுத்துக் கொள்ளுங்கள்.

### உரையாடல் குறிப்பு!

உரையாடலைப்பயனாளர்வழிநடத்தவிட்டு,அவர்தமது எண்ணங்களைவெளிப்படுத்த இடம்கொடுங்கள். உங்களுக்காகச்சிலயோசனைகள்:

அவரதுபடைப்பைப்பாராட்டி,அதில்உங்களைக்கவர்ந்தது எதுஎன்பதைப்பகிர்ந்துகொள்ளுங்கள்.

புகைப்படத்தில்அல்லதுஓவியத்தில்உள்ளபொருட்களைத் தொடக்கமாகப்பயன்படுத்திஉங்களதுசொந்தக் கதைகளையும்கனவுகளையும்பகிர்ந்துகொள்ளுங்கள்.

உங்களதுசொந்த அனுபவத்தைப்பகிர்ந்துகொண்டு, அதுபற்றி அவரது எண்ணத்தையும் ஆலோசனையையும் கேளுங்கள்.



கலைத் தொண்டூழியராகச் சேவையாற்றுவதற்கு நன்றி! உங்கள் பயனாளருடன் அர்த்தமுள்ள வகையில் கலந்துறவாட நட்பாளருக்கான கலைத் தொகுப்பு உதவியாக இருந்திருக்கும் என நம்புகிறோம். இன்னும் பல யோசனைகளைக் கண்டறிய, அன்புகூர்ந்து **www.nac.gov.sg/BAToolkit** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## நன்றி


நடவடிக்கையை வடிவமைத்தோர்
Karen Koh

சிறப்பு நன்றி
Life Community Services Society
REACH Community Services Society
Montfort Care
YMCA of Singapore
NTUC Health Co-operative Limited
WeCare@ Marine Parade

முன்னெடுப்பு
NATIONAL ARTS COUNCIL SINGAPORE

ஆதரவாளர்
Ministry of Culture, Community and Youth

எங்கள் ஆதரவு
SG Cares



பயன்பாட்டு விதிமுறைகள்: இந்த வெளியீட்டின் எந்தவொரு பகுதியும், வெளியீட்டாளரின் எழுத்துபூர்வ அனுமதியின்றி, மறுபதிப்பு செய்யப்படவோ, மீட்கத்தக்க வடிவத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்படவோ, அல்லது மின்னியல், இயந்திரவியல், நகலெடுப்பு, ஒளிப்பதிவு அல்லது வேறு வகையான எந்த வடிவத்திலும் அல்லது வழியிலும் அனுப்பப்படவோ கூடாது. இதிலுள்ள அறிவுறுத்தல்கள் துல்லியமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வெளியீட்டாளர் அனைத்து முயற்சிகளையும் எடுத்திருந்தாலும், இதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு காயத்திற்கும் அல்லது உடமை சேதத்திற்கும் வெளியீட்டாளர் பொறுப்பேற்க முடியாது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இது கண்டிப்பாக விற்பனைக்கானது அல்ல.